# மீனவர்களுக்கு நல உதவிகள் உயர்வு உள்ளிட்ட 6 அறிவிப்புகள்!

குமரியில் இருக்கக்கூடிய அனைத்துப் பகுதிகளுக்கும் வளர்ச்சித் திட்டங்களை கொண்டு வந்து சேர்த்திருக்கிறோம். இவ்வளவு இருந்தாலும் உங்கள் மாவட்டத்திற்கு என்று வந்து விட்டு, உங்களுக்கு புது அறிவிப்புகளை வெளியிடாமல் சென்றால் நன்றாக இருக்குமா? மேடையில் இருப்பவர்கள் சும்மா இருப்பார்களா! அதுவும் காங்கிரஸ் கட்சியைக் கேட்கவே வேண்டாம் - என்னை உரிமையோடு துளைத்து எடுத்துவிடுவார்கள். அதனால், குமரி மாவட்டத்திற்கான ஆறு புதிய அறிவிப்புகளை இப்போது நான் உங்களிடத்தில் வெளியிட இருக்கிறேன்.

**முதல் அறிவிப்பு** – சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகை தரக்கூடிய கன்னியாகுமரி நகராட்சியின் குடிநீர்த் தேவைகளை நிறைவு செய்ய, பழையாற்றிலிருந்து கூடுதல் குடிநீர் வழங்க 28 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டம் செயல்படுத்தப்படும். மேலும், முக்கடலும் சங்கமிக்கும் இந்த பகுதியில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில், புதிய கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

**இரண்டாவது அறிவிப்பு** – குளச்சல் நகராட்சி மற்றும் மண்டைக்காடு பேரூராட்சி பொதுமக்களின் நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், AVM கால்வாய் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

**மூன்றாவது அறிவிப்பு** – களியக்காவிளை - கன்னியாகுமரி சாலையில் அதிகமாக போக்குவரத்து நெரிசல் உள்ள பகுதிகளில், 9 கோடி ரூபாய் செலவில் சாலைகள் அகலப்படுத்தி மேம்படுத்தப்படும்.

**நான்காவது அறிவிப்பு** – கல்குளம் வட்டம் - முளகுமூட்டில் உள்ள பழம்பெரும் தூய மரியன்னை பசிலிக்கா தேவாலயம், 2 கோடி ரூபாய் செலவில், அதன் பழமை மாறாமல் புனரமைக்கப்படும்.

**ஐந்தாவது அறிவிப்பு** - தமிழ்நாடு மீனவர் நல வாரியம் மூலமாக தற்போது மீனவர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர்க்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் போன்ற பல்வேறு நிதி உதவிகள் அனைத்தும் உயர்த்தி வழங்கப்படும். இதற்கான விரிவான அரசாணைகளையும் விரைவில் வெளியிடுவோம்.

**ஆறாவது அறிவிப்பு** – கடலில் மீன் பிடிக்கச் செல்லும்போது, காணாமல் போகும் நேர்வில், காப்பீடு உள்ளிட்ட நிவாரணங்கள் கிடைக்கும் நாள் வரை அந்த மீனவர்களின் குடும்ப வாரிசுதாரருக்கு மாதம் இரண்டாயிரம் ரூபாய் உதவித்தொகையாக மீனவர் நல வாரியம் மூலம் வழங்கப்படும்.

**– முதல்வர் மு.க.ஸ்டாலின்**
**கன்னியாகுமரி அரசு விழா**

## மதுரை தெற்கு மாவட்டம்

### மாவட்ட துணைச் செயலாளர் (பொது), பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புக்களுக்கான தேர்தல்

**வேட்புமனுத் தாக்கல் - தலைமைக் கழக அறிவிப்பு!**

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் மதுரை தெற்கு மாவட்டத்தில், மாவட்ட துணைச் செயலாளர் (பொது) பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதாலும் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட கொம்பாடி கு.தங்கம் மறைவெய்திய காரணத்தாலும்;

தலைமைச் செயற்குழு உறுப்பினர் த.முத்துராமன் அவர்கள் செல்லம்பட்டி தெற்கு ஒன்றியச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து வருவதால், அவர் வகித்து வந்த தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதாலும் -ஏர்போர்ட் ஆர்.பாண்டியன் தான் வகித்து வந்த தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்ட காரணத்தினாலும் ;

**மதுரை தெற்கு மாவட்டம், மாவட்ட துணைச் செயலாளர் (பொது), பொருளாளர்,** மற்றும் **தலைமைச் செயற்குழு உறுப்பினர் (இருவர்)** ஆகிய பொறுப்புக்களுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2026, பிப்ரவரி 28 (சனிக்கிழமை) அன்று ரூ.25000/– வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்”.**

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் மதுரை தெற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பகுதி/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 24.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.


### திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், மக்கள் நலத்திட்டங்களோடு

## கழகத் தலைவரின் பிறந்தநாளை வருடம் முழுவதும் கொண்டாடிடுவோம்!

### பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!

*திருவண்ணாமலை,பிப். 26-*

*திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முதலமைச்சரும், கழக தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை மக்கள் நல திட்டங்களோடு. வருடம் முழுவதும் கொண்டாடிடுவோம் என்று பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*



*இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்,*

*கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பயணம், காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் மற்றும் அரசு ஊழியர்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஒய்வூதிய திட்டம் என இந்திய ஒன்றியமே திரும்பி பார்க்கிற, மற்ற மாநிலங்கள் பின்பற்றுகிற மக்கள் நலத்திட்டங்களை தந்திட்ட, தமிழர்களின் ஒப்பற்றத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு மார்ச் திங்கள் முதல் நாள் பிறந்த நாள்.*

*சனாதன, புராதன குப்பைகளிலே புரண்டு கிடந்த தமிழ் சமுகத்தை மீட்டெடுத்த* **தந்தை பெரியார்**, *பண்பாட்டு தளத்தையும், அரசியல் தளத்திற்கு கொண்டு வந்து, தாய் நாட்டிற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டிய* **பேரறிஞர் அண்ணா**, *இருவரையும் இரு கண்களாக கொண்டு அவர்களின் இலட்சியங்களை சட்டங்களாக்கி, தமிழ் சமுகத்தை ஒரு சர்வதேச சமூகமாக மாற்றி காட்டிய* **தலைவர் கலைஞர்** *ஆகிய இவர்களின் வழியில் கூட்டணி இயக்கங்கள் மட்டுமல்ல, எதிர்க்கட்சிகளும் பாராட்டுகிற திராவிட மாடல் அரசை நடத்திவரும், எட்டு கோடி தமிழர்களின் இதய நாயகன், உலகத்தமிழர்களின் ஒரே நம்பிக்கை, தமிழர்களின் எழுச்சி வடிவம் முதலமைச்சர்,* **கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின்** *அவர்களின் பிறந்தநாள் மார்ச் 1 அன்று தமிழ்கூறும் நல்உலகத்தில் சிறப்பாக கொண்டாடப்பட இருக்கிறது.*

*சொன்னதை மட்டுமல்ல, சொல்லாத சாதனைகளான* **காலை உணவுத் திட்டம்**, **புதுமைப்பெண் திட்டம்**, **தமிழ்ப் புதல்வன் திட்டம்** *என கொண்டு வந்து, தமிழக மாணவர்களால் அப்பா என அழைக்கப்படுகிற, நம் இனத்தலைவர் பிறந்த நாளை திருவண்ணாமலை வடக்கு, தெற்கு மாவட்டங்களில் உள்ள மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், அணி சார்ந்த அமைப்பின் நிர்வாகிகள், மார்ச் 1 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிப்பது, கழகக் கொடியேற்றுவது, கழக அரசின் சாதனைகளை விளக்கி பொதுக் கூட்டங்கள் நடத்துவது, மக்களுக்கு தேவையான நல உதவிகளை செய்வது, மரம் நடுதல், நீர் நிலைகளை செப்பனிடுதல், இரத்ததானம் செய்தல், மருத்துவ முகாம் நடத்துதல் என மக்களின் தேவை அறிந்து உதவிகளை செய்து கழகத்தலைவரின் பிறந்தநாளை எழுச்சியாக கொண்டாடிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

### சட்டமன்றத் தேர்தல் :

# 6 வது நாளாக தி.மு.க. விருப்ப மனு விநியோகம்!

## சென்னை – அண்ணா அறிவாலயத்தில் ஏராளமான கழகத்தினர் திரண்டனர்!





சென்னை, பிப். 26-

சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடுபவர்களுக்கான விருப்ப மனு விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 20.2.2026 அன்று தொடங்கியது.

6வது நாளாக நேற்று (25.2.2026) கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் ஆர்வமுடன் விருப்ப மனுக்களைப் பெற்றனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் தி.மு.க. தலைமையில் மெகா கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டணியில் புதிதாக தே.மு.தி.க. இடம் பெற்றுள்ளது. தொடர்ந்து கூட்டணி கட்சிகளுடன் தி.மு.க. தொகுதிப் பங்கீடு குறித்து அதிகாரப்பூர்வ பேச்சுவார்த்தையை தொடங்கி உள்ளது.

இந்த நிலையில் தி.மு.க. சார்பில் போட்டியிட விரும்புகிறவர்களிடம் இருந்து விருப்ப மனுக்கள் விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் கடந்த (20ஆம் தேதி) அன்று தொடங்கியது.

6வது நாளாக நேற்று (25.02.2026) அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனுக்களை கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன், அண்ணா அறிவாலயம் மேலாளர் பத்மநாபன் ஆகியோர் பெற்றனர். அப்போது கழகத்தினர் ஏராளமானோர் விருப்ப மனுக்களை அளித்தனர்.

தற்போது விருப்ப மனுக்களைப் பொறுத்தவரையில் 234 தொகுதிகளுக்கும் பெறப்படுகிறது.

இதே போன்று, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக வந்து திரண்டு விருப்ப மனுக்களை வாங்கிச் செல்கின்றனர். ஏராளமானோர் பூர்த்தி செய்த விருப்ப மனுக்களையும் தாக்கல் செய்தனர். விருப்ப மனு விநியோகம் வருகிற மார்ச் 2ஆம் தேதி வரை நடைபெறுகிறது.